# TAMIL

**APR-6-25**

**Test Booklet Code**

வினாத்தாள் தொகுப்புக் குறியீடு

**A**

This Test Booklet contains **32** pages. இவ்வினாத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டது.

Do not open this Test Booklet until you are asked to do so.

இந்த வினாத் தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் திறக்கக் கூடாது.

Read carefully the instructions on the Back Cover of this Test Booklet.

வினாத் தொகுப்பிற்கு பின் பக்கமுள்ள அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

Name of the Candidate (in CAPITALS) :
தேர்வு எழுதுபவரின் பெயர்: ______________________

Roll Number : : in figures
பதிவு எண் : எண்ணில் ______________________
: in words
: எழுத்தில் ______________________

Centre of Examination (in CAPITALS) :
தேர்வு மையம் : ______________________

Candidate's Signature :
தேர்வு எழுதுபவரின் கையொப்பம் : ______________________

Invigilator's Signature :
கண்காணிப்பாளரின் கையொப்பம் : ______________________

Facsimile signature stamp of
Centre Superintendent : ______________________

**In case of any ambiguity in translation of any question, English version shall be treated as final.**

வினா மொழி பெயர்ப்பில் ஏதாவது சர்ச்சை இருந்தால், ஆங்கில பிரதியே முடிவானது.

## INSTRUCTIONS / வழிமுறைகள்

1. This Test Booklet contains **FOUR** sections. Section "A" **Language** contains **25** questions of **2** marks each. Section "B" **Mathematics** contains **50** questions of **3** marks each. Section "C" **Intelligence** and Section "D" **General Knowledge** contain **25** questions each of **2** marks each. In all, the Question paper consists of **125** questions for a total of **300** marks. Answer all questions.
   இந்த வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது. பிரிவு "A" மொழி 25 வினாக்களும் தலா 2 மதிப்பெண்களைக் கொண்டது. பிரிவு "B" கணிதம் 50 வினாக்கள் தலா 3 மதிப்பெண்களைக் கொண்டது. பிரிவு "C" நுண்ணறிவு மற்றும் பிரிவு "D" பொது அறிவும் தலா 2 மதிப்பெண்களைக் கொண்டு தலா 25 கேள்விகளுடன் உள்ளன. மொத்தம் 300 மதிப்பெண்களுக்கு 125 கேள்விகள் உள்ளன. அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிக்கவும்.
2. Duration of the test is 2 hours and 30 minutes. (150 minutes)
   தேர்வு நேரம் 2 மணி 30 நிமிடங்கள் (150 நிமிடங்கள்) ஆகும்.
3. Candidates are required to choose any of the following 13 languages : Assamese, Bengali, English, Gujarati, Hindi, Kannada, Malyalam, Marathi, Odiya, Punjabi, Tamil, Telugu or Urdu, while applying.
   விண்ணப்பப் படிவத்தில், பின்வரும் 13 மொழிகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டும்: அஸ்ஸாமி, பெங்காலி, ஆங்கிலம், குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒடியா, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு மற்றும் உருது.
4. Question paper booklet for those who opted for English or Hindi will be bilingual (i.e. in English and in Hindi), except the language part.
   ஆங்கிலம் அல்லது இந்தியைத் தேர்வு செய்தவர்களுக்கான வினாத்தாள் கையேடு இரு மொழிகளில் இருக்கும். மொழி பகுதியைத் தவிர்த்து.
5. Question paper booklet for those who opted for any of the specified languages, will be bilingual, in the language opted by the candidate and in English.
   குறிப்பிட்ட பிராந்திய மொழிகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்தவர்களுக்கான வினாத்தாள் கையேடு உங்கள் விண்ணப்ப படிவத்தில் நீங்கள் தேர்ந்தெடுத்த மொழியிலும் மற்றும் ஆங்கிலத்திலும் இருக்கும்.
6. Questions in **Section "A"** are specific to each language. They vary from language to language. They are to be attempted in the language opted by you in your application form and indicated on your Admit Card. They will be evaluated with reference to the answer key of the specific language opted by you.
   பிரிவு "A" வினாக்கள் ஒவ்வொரு மொழிக்கும் பிரத்யேகமானவை, அவை மொழிக்கு மொழி வேறுபடும். அவ்வினாக்களுக்கு, நீங்கள் உங்கள் விண்ணப்பப் படிவத்தில் தேர்வு செய்த மற்றும் உங்கள் அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்ட மொழியிலேயே பதில் அளிக்கவும். அவ்வினாக்கள் நீங்கள் தேர்வு செய்த மொழி வாரியாக அவைகளுக்குண்டான பதிலின்படி மதிப்பீடு செய்யப்படும்.


[Instructions continued on Page No. 32]

**நிபந்தனைகள்:** ஒவ்வொரு கேள்விக்கும் நான்கு விருப்பத் தெரிவுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடை மட்டும்தான் சரியானது. மிகவும் பொருத்தமான விருப்பத் தெரிவைத் தேர்ந்தெடுத்து OMR விடைத்தாளில் அதற்கு உள்ள வட்டத்தைக் கருமையாக்கவும்.

பிரிவு - **'A'** மொழி

தமிழ்நாடு மாநிலம் இந்தியாவின் தென்முனையில் அமைந்துள்ளது. உலகின் பழம்பெரும் மொழிகளில் ஒன்றான தமிழ்மொழி பேசும் தமிழர் வாழும் பகுதி தமிழ்நாடு என வழங்கப்படுகிறது. இதன் தலைநகரம் சென்னை ஆகும். தமிழகம் ஐயாயிரத்தி ஐநூறு ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான கலாச்சார வரலாற்றைக் கொண்டுள்ளது. பல நூற்றாண்டுகளாகச் சோழர், பாண்டியர், சேரர்களால் ஆளப்பட்டுள்ளன. தமிழகத்தில் இயற்கை வளங்கள், கட்டிடக்கலைகள் கோவில்கள் உள்ளிட்டவை நிறைந்துள்ளன. தற்பொழுது, கீழடி எனும் ஊரில் நடைபெற்றுவரும் அகழாய்வில் தமிழின் தொன்மையை வெளிப்படுத்தும் தமிழி எழுத்துகள் கொண்ட பானை ஓடுகளும் பழந்தமிழரின் பொருட்களும் கிடைத்து வருகின்றன.

001. தமிழகம் ____________ ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான கலாச்சார வரலாற்றைக் கொண்டுள்ளது.

(1) 5550

(2) 5600

(3) 5000

(4) 5500

002. தமிழ்நாடு மாநிலம் இந்தியாவின் ____________ முனையில் அமைந்துள்ளது.

(1) வடக்கு

(2) தெற்கு

(3) மேற்கு

(4) கிழக்கு

003. உலகின் பழம்பெரும் மொழிகளில் ஒன்றான தமிழ்மொழி பேசும் தமிழர் வாழும் பகுதி தமிழ்நாடு என வழங்கப்படுகிறது.

மேற்காணும் வாக்கியத்தில் 'பழம்பெரும்' என்பது

(1) பெயர்ச்சொல்

(2) பெயரடை

(3) வினையடை

(4) உரிச்சொல்

004. 'தொன்மை' எனும் சொல்லின் பொருள் என்ன?

(1) புதுமை

(2) பழமை

(3) அகழாய்வு

(4) தொல்குடி

005. தமிழ்மொழியின் பழமையான எழுத்தின் பெயர் ____________.

(1) தமிழ்

(2) வட்டெழுத்து

(3) தமிழி

(4) கிரந்தம்

006. நிலா பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அது நீல நிறம் கொண்டது. இவ்வாக்கியத்தில் பிரதிப்பெயர் கண்டறிக.

(1) நிலா (2) அது

(3) நிறம (4) அழகாக

007. இந்த நூல்கள் பார்ப்பதற்கு நன்றாக ____________.

(1) உள்ளது (2) உள்ளன

(3) உள்ளும (4) உண்டு

008. கோடிட்ட இடத்தைப் பொருத்தமான இணைப்புக் கிளவியைக் கொண்டு நிரப்புக.

அவன் போய்விட்டான் ____________ தெரிந்தபின்புதான் நான் போனேன்.

(1) என்பதற்கு (2) இல்லை

(3) என்பதை (4) இல்லையா

009. சரியான வினைச்சொல் கொண்டு சொற்றொடரை நிறைவு செய்க.

பேருந்து குலுங்கி குலுங்கி ____________.

(1) செலுத்தும்

(2) செல்கிறது

(3) செலுத்தப்பட்டது

(4) செலுத்தப்படும்

010. கோடிட்ட இடத்தைச் சரியான சொல் கொண்டு நிரப்பவும்

பாண்டியனின் குதிரைப்படை காற்றைக் கிழித்துக் கொண்டு ____________.

(1) பறந்தன

(2) பறந்தது

(3) பார்த்தது

(4) பார்த்தன

011. அடியாத மாடு பணியாது என்பதன் பொருள்?

(1) கண்டிப்பாக இருத்தல்

(2) கண்டிப்பில்லாமல் இருத்தல்

(3) மாட்டை அடிக்க வேண்டும்

(4) மாட்டை அடிக்கக் கூடாது

012. பொருந்தாததைக் கண்டுபிடிக்கவும்.

(1) சதுரம்

(2) வட்டம்

(3) முக்கோணம்

(4) கணிதம்

013. வாக்கியத்தை மேம்படுத்த சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதைக் கொண்டு அடிக்கோடிட்ட சொல்லை மாற்றியமைக்கவும்.

சோழ மன்னர்கள் சைவசமயத்தைச் சார்ந்தது.

(1) சார்ந்திருப்பர்

(2) சார்ந்தவர்

(3) சார்ந்தவர்கள்

(4) மேம்பாடு இல்லை

014. சொற்றொடரை மேம்படுத்த சரியான விருப்பத் தேர்வைத் தேர்ந்தெடுக்கவும்.

முருகன் ஊட்டிக்குப் பலமுறை போனான்.

(1) போனான்

(2) போகிறான்

(3) போயிருக்கிறான்

(4) போவான்

015. கீழ்க்காணும் விருப்பத் தேர்வுகளிலிருந்து 'ஆ' எனும் ஒரெழுத்து ஒருமொழிச் சொல்லின் பொருளைக் கண்டறிக.

(1) விலங்கு

(2) பசு

(3) குரங்கு

(4) யானை

016. பன்மையைக் கண்டுபிடிக்கவும்

(1) நூல்

(2) நூற்கள்

(3) புத்தகம்

(4) கல்

017. சரியான சொல் எது?

(1) வாணம்

(2) வாநம்

(3) வாநாம்

(4) வானம்

018. எதிர்பதம் கூறுக : பிறப்பு

(1) வாழ்வு

(2) இறப்பு

(3) சிறப்பு

(4) நடிப்பு

019. பொருந்தாததைக் கண்டுபிடிக்கவும்.

(1) மீன்

(2) முட்டை

(3) காளான்

(4) இறைச்சி

020. நேர்பதம் காண்க.

வளர்ச்சி

(1) வீழ்ச்சி

(2) மாற்றம்

(3) பின்னேற்றம்

(4) முன்னேற்றம்

021. எதிர்பதம் காண்க.

வளமை

(1) புதுமை

(2) வறுமை

(3) பாதுகாப்பின்மை

(4) வெண்மை

022. ஒருமையைக் கண்டுபிடிக்கவும்.

(1) மூக்கு

(2) இமைகள்

(3) கண்கள்

(4) கால்கள்

023. தன்மை நிகழ்கால ஒருமையைச் சுட்டுக.

(1) விளையாடு

(2) விளையாடுகிறேன்

(3) விளையாடுகிறோம்

(4) விளையாடினேன்

024. செயப்படுபொருள் குன்றிய வினைச்சொல் எது?

(1) கடித்தான்

(2) அடித்தான்

(3) படித்தான்

(4) சிரித்தான்

025. இராமன் லட்டைச் சாப்பிட்டான்.

மேற்கூறிய வாக்கியத்தில் பயின்றுவரும் வேற்றுமை உருபு?

(1) 3-ஆம் வேற்றுமை உருபு

(2) 2-ஆம் வேற்றுமை உருபு

(3) 4-ஆம் வேற்றுமை உருபு

(4) 5-ஆம் வேற்றுமை உருபு

நிபந்தனைகள்: ஒவ்வொரு கேள்விக்கும் நான்கு விருப்பத் தெரிவுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடை மட்டும்தான் சரியானது. மிகவும் பொருத்தமான விருப்பத் தெரிவைத் தேர்ந்தெடுத்து OMR விடைத்தாளில் அதற்கு உள்ள வட்டத்தைக் கருமையாக்கவும்.

## பிரிவு - 'B' கணிதம்

026. 179.08 மற்றும் 20.17 இவற்றின் கூடுதலுடன் எந்த ஒன்றைச் சேர்த்தால் 512 பெறலாம்?

(1) 711.25 (2) 313.25
(3) 312.75 (4) 321.75

027. ஒரு எண்ணின் 48% என்பது 120 எனில் அந்த எண்ணின் 170% யாது?

(1) 400 (2) 425
(3) 385 (4) 475

028. ஒரு செவ்வக வடிவ நிலப்பகுதி 700m x 500m என அளவிடப்படுகிறது. அது 4 சுற்றுகள் கம்பியால் வேலி போட வேண்டியுள்ளது. தேவைப்படும் கம்பியின் நீளம் என்பது?

(1) 7200 m (2) 4800 m
(3) 9600 m (4) 8600 m

029. 15, 12, 17, (x+5), (x-1) மற்றும் 22 என்பதன் சராசரி 15. x -ன் மதிப்பு என்பது?

(1) 20 (2) 12
(3) 8 (4) 10

030. சம பரப்பளவுக் கொண்ட ஆறு வட்ட கோணப்பகுதிகள் ஒரு வட்டத்தில் உள்ள மூன்று விட்டங்களால் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு வட்ட கோணப் பகுதியின் இரண்டு அடுத்த ஆரங்கள் தோற்றுவிக்கும் கோணங்களின் அளவு?

(1) 90°
(2) 45°
(3) 60°
(4) 30°

***Instructions :*** *Each question has four options. There is only one correct option in each question. Choose the correct/most appropriate option and darken the corresponding circle with blue/black on the OMR Answer Sheet.*

## SECTION "B" : MATHEMATICS

026. What should be added to the sum of 179.08 and 20.17 to get 512 ?

(1) 711.25 (2) 313.25
(3) 312.75 (4) 321.75

027. If 48% of a number is 120, then what is 170% of the number ?

(1) 400 (2) 425
(3) 385 (4) 475

028. A rectangular piece of land measures 700 m by 500 m. It is to be fenced with 4 rounds of wire. The length of the wire needed is :

(1) 7200 m (2) 4800 m
(3) 9600 m (4) 8600 m

029. The average of 15, 12, 17, (x+5), (x-1) and 22 is 15. The value of x is :

(1) 20 (2) 12
(3) 8 (4) 10

030. Six sectors of equal area are formed by the three diameters in a circle. The measure of an angle formed by two adjacent radii in each sector is :

(1) 90°
(2) 45°
(3) 60°
(4) 30°

031. $32 + 16 \div 4 - 2 \times 3$ என்பதன் மதிப்பு?

(1) 26 (2) 30

(3) 6 (4) 20

032. $\frac{2}{5}$ மற்றும் $\frac{7}{8}$ என்பதன் கூடுதலின் தசம வடிவம் என்பது?

(1) 1.275 (2) 1.875

(3) 0.875 (4) 2.175

033. ஒரு பள்ளிக்கு 50 நாற்காலிகள் மற்றும்30 கரும்பலகைகள் வாங்கப்படுகின்றன. ஒவ்வொரு நாற்காலியும் ₹ 1065 மற்றும் ஒவ்வொரு கரும்பலகையும் ₹ 1645 விலை மதிப்பு கொண்டவை எனில் இரசீதின் மொத்த தொகை?

(1) ₹ 1,02,500

(2) ₹ 92,600

(3) ₹ 1,02,600

(4) ₹ 1,20,600

034. $3-\frac{4}{5}+(?)-\frac{7}{15}=2\frac{2}{5}$ இதன் மதிப்பு என்பது?

(1) $\frac{1}{4}$ (2) $\frac{1}{3}$

(3) $\frac{2}{3}$ (4) $\frac{3}{4}$

035. ஒரு முக்கோணத்தின் ஒரு கோணம் செங்கோணத்தில் பாதி அளவு மற்றும் மற்றொரு கோணம் செங்கோணத்தில் 1/3 பங்கு. முக்கோணத்தின் பக்கங்கள் மற்றும் கோணங்களைக் கொண்டு அவற்றைப் பெயரிடுக.

(1) அசம பக்க குறுங்கோண முக்கோணம்

(2) அசம பக்க செங்கோண முக்கோணம்

(3) இருசம பக்க செங்கோண முக்கோணம்

(4) இருசம பக்க விரிகோண முக்கோணம்

031. The value of $32 + 16 \div 4 - 2 \times 3$ is :

(1) 26 (2) 30

(3) 6 (4) 20

032. The decimal form of the sum of $\frac{2}{5}$ and $\frac{7}{8}$ is :

(1) 1.275 (2) 1.875

(3) 0.875 (4) 2.175

033. 50 chairs and 30 blackboards were purchased for a school. If each chair costs ₹ 1065 and each blackboard costs ₹ 1645, then the total amount of the bill is :

(1) ₹ 1,02,500

(2) ₹ 92,600

(3) ₹ 1,02,600

(4) ₹ 1,20,600

034. The value of '?' in $3-\frac{4}{5}+(?)-\frac{7}{15}=2\frac{2}{5}$ is :

(1) $\frac{1}{4}$ (2) $\frac{1}{3}$

(3) $\frac{2}{3}$ (4) $\frac{3}{4}$

035. One angle of a triangle is half of a right angle and another angle is 15° more than $\frac{1}{3}rd$ of a right angle. Name the triangle based on its sides and angles :

(1) Scalene acute angled triangle

(2) Scalene right angled triangle

(3) Isosceles right angled triangle

(4) Isosceles obtuse angled triangle

036. கீழ்க்கண்ட பின்னங்களை ஏறு வரிசையில் எழுதுக. $\frac{2}{3}, \frac{1}{6}, \frac{5}{9}$ மற்றும் $\frac{7}{12}$

(1) $\frac{5}{9}, \frac{1}{6}, \frac{7}{12}, \frac{2}{3}$

(2) $\frac{5}{9}, \frac{2}{3}, \frac{1}{6}, \frac{7}{12}$

(3) $\frac{1}{6}, \frac{5}{9}, \frac{2}{3}, \frac{7}{12}$

(4) $\frac{1}{6}, \frac{5}{9}, \frac{7}{12}, \frac{2}{3}$

037. ஒரு அறையின் நீளம், அகலம் மற்றும் உயரம் முறையே 1050 cm, 750cm மற்றும் 425cm. அறையின் முப்பரிமாணத்தை அளவிடும் நீள அளவீடு நாடாவின் பெரும நீளம் துல்லியமாக

(1) 125 cm (2) 150 cm

(3) 25 cm (4) 50 cm

038. கீழ்க்கண்ட கூற்றுகளில் எவை சரியானவை?

(A) ஒரு எண் 4 ஆல் வகுபடும் எனில் அது 8 ஆல் வகுபட வேண்டும்.

(B) ஒரு எண் 3 மற்றும் 5 ஆல் வகுபடும் எனில் அது 15 ஆலும் வகுபட வேண்டும்.

(C) 2 மற்றும் 8 ஆல் வகுபடும் ஒரு எண் 16 ஆலும் வகுபடும்.

(D) இரண்டு அடுத்தடுத்த ஒற்றைப்படை எண்களின் கூட்டுத்தொகை எப்போதும் 4 ஆல் வகுபடும்.

(1) (A), (B), மற்றும் (D) மட்டும்

(2) (B) மற்றும் (C) மட்டும்

(3) (B) மற்றும் (D) மட்டும்

(4) (B), (C) மற்றும் (D) மட்டும்.

036. Arrange the following fractions in ascending order :

$\frac{2}{3}, \frac{1}{6}, \frac{5}{9}$ *and* $\frac{7}{12}$

(1) $\frac{5}{9}, \frac{1}{6}, \frac{7}{12}, \frac{2}{3}$

(2) $\frac{5}{9}, \frac{2}{3}, \frac{1}{6}, \frac{7}{12}$

(3) $\frac{1}{6}, \frac{5}{9}, \frac{2}{3}, \frac{7}{12}$

(4) $\frac{1}{6}, \frac{5}{9}, \frac{7}{12}, \frac{2}{3}$

037. The length, breadth and height of a room are 1050 cm, 750 cm and 425 cm, respectively. The length of the longest tape which can measure the three dimensions of the room exactly is :

(1) 125 cm (2) 150 cm

(3) 25 cm (4) 50 cm

038. Which of the following statements are correct ?

(A) If a number is divisible by 4, it must be divisible by 8.

(B) If a number is divisible by 3 and 5, then it is divisible by 15 also.

(C) A number which is divisible by 2 and 8 is divisible by 16 also.

(D) The sum of two consecutive odd numbers is always divisible by 4.

(1) Only (A), (B), and (D)

(2) Only (B) and (C)

(3) Only (B) and (D)

(4) Only (B), (C) and (D)

039. நீளம் 9cm மற்றும் அகலம் 8cm கொண்ட ஒரு திட உலோக கனச்செவ்வகம் 6cm பக்கம் கொண்ட ஒரு உலோக கனசதுரத்தை உருக்கி உருவாக்கப்படுகிறது. கனச் செவ்வகத்தின் உயரம் என்பது?

(1) 6 cm (2) 3 cm
(3) 4 cm (4) 2 cm

040. 5- இலக்க எண்கள் எத்தனை உள்ளன?

(1) 89,000 (2) 89,9999
(3) 90,000 (4) 89,900

041. ரோமன் எண்ணில் எழுதப்படும் எண், LXXIX - XXXIX என்பதன் மதிப்பு?

(1) XXIX (2) CIX
(3) XC (4) XL

042. ஒரு மோட்டார் வாகனம் 65 km/hr. வேகத்தில் ஓடிக்கொண்டு இருக்கிறது. அதே வேகத்தில் 180 நிமிடங்களில் அது எவ்வளவு தொலைவைக் கடக்கும்?

(1) 117 km (2) 195 km
(3) 245 km (4) 180 km

043. கீழ்க்கண்டவற்றில் எந்த ஒன்று 446 என்பதற்கான சரியான ரோமன் எண்ணிலக்கம்?

(1) DCXLVI (2) CDXLVI
(3) CCXLVI (4) CLXXVI

044. சுனிதா ஒரு புத்தகத்தின் 5/7 பகுதியை 5 மணிகளில் படிக்கிறாள். 2 மணிகளில் அவள் படிக்கும் புத்தகத்தின் பகுதி என்பது?

(1) $\frac{1}{7}$ (2) $\frac{3}{7}$
(3) $\frac{2}{7}$ (4) $\frac{4}{7}$

039. A solid metallic cuboid of length 9 cm and width 8 cm is formed by melting a solid metallic cube of side 6 cm. The height of the cuboid is :

(1) 6 cm (2) 3 cm
(3) 4 cm (4) 2 cm

040. Total how many 5 digit numbers are there ?

(1) 89,000 (2) 89,9999
(3) 90,000 (4) 89,900

041. A number written in Roman Numerals LXXIX - XXXIX is equal to :

(1) XXIX (2) CIX
(3) XC (4) XL

042. A car runs with a speed of 65 Km/hr. How far will it travel in 180 minutes with the same speed ?

(1) 117 km
(2) 195 km
(3) 245 km
(4) 180 km

043. Which of the following is the correct representation of 446 in Roman Numerals ?

(1) DCXLVI (2) CDXLVI
(3) CCXLVI (4) CLXXVI

044. Sunita reads $\frac{5}{7}$ part of a book in 5 hours. The part of the book she will read in 2 hours is :

(1) $\frac{1}{7}$ (2) $\frac{3}{7}$
(3) $\frac{2}{7}$ (4) $\frac{4}{7}$

045. கீழ்க்கண்ட கூற்றுகளைப் படித்து சரியான தெரிவைத் தேர்ந்தெடு.
கூற்று I ஒரு சதுரத்தின் மூலை விட்டங்கள் சம நீளம் கொண்டு ஒன்றுக்கொன்று செங்குத்தாக உள்ளன.
கூற்று II ஒரு சாய் சதுரத்தின் நீளங்கள் சமம் மற்றும் அவை ஒன்றுக்கொன்று செங்குத்தாக இருக்கும்.
(1) கூற்று I மட்டும் சரி.
(2) கூற்று II மட்டும் சரி.
(3) கூற்றுகள் I மற்றும் II இரண்டும் சரியானவை.
(4) கூற்றுகள் I மற்றும் II இரண்டும் தவறானவை.

046. a = 5, மற்றும் b = 15 எனில்
$\left(\frac{a}{b}+1\right)\frac{b}{a}+(b-a)$ என்பதன் மதிப்பு.
(1) 24 (2) 12
(3) 18 (4) 14

047. ஒரு பெண் 5kg 640g உருளைக்கிழங்கு, 3kg 37g வெங்காயம் மற்றும் 6kg 8g தக்காளியை வாங்குகிறாள். அவற்றில் 2kg 45g தக்காளி அழுகி உள்ளதைக் கண்டு காய்கறி கடைக்காரரிடம் திரும்பக் கொடுத்து விடுகிறாள். அவள் வீட்டிற்கு எடுத்துச் செல்லும் காய்கறிகளின் எடை என்பது?
(1) 13.460 kg
(2) 12.973 kg
(3) 13.360 kg
(4) 12.640 kg

048. 35 காகித உறைகளின் விலை ₹ 87.50. ₹ 730 க்கு இந்த வகையான எத்தனை உறைகளை வாங்கலாம்?
(1) 126 (2) 252
(3) 312 (4) 292

045. Read the given statements and choose the correct option :
Statement-I : The diagonals of a square are equal in length and are perpendicular to each other.
Statement-II : The diagonals of a rhombus are equal in length and are perpendicular to each other.
(1) Only statement-I is true
(2) Only statement-II is true
(3) Both the statements are true
(4) Both the statements are false

046. If a = 5 and b = 15, then the value of
$\left(\frac{a}{b}+1\right)\frac{b}{a}+(b-a)$ is :
(1) 24 (2) 12
(3) 18 (4) 14

047. A woman bought 5 kg 640 gm potatoes, 3 kg 37 gm onions and 6 kg 8 gm tomatoes. She found 2 kg 45 gm tomatoes rotten and returned these to the vegetable vendor. The weight of the vegetables she took home is :
(1) 13.460 kg
(2) 12.973 kg
(3) 13.360 kg
(4) 12.640 kg

048. 35 envelopes cost ₹ 87.50. How many such envelopes can we buy for ₹ 730 ?
(1) 126 (2) 252
(3) 312 (4) 292

049. ஒரு மிகச்சிறிய எண்ணை 25, 40 மற்றும் 60 ஆல் வகுக்கும் போது ஒவ்வொரு நிகழ்விலும் மீதி 9 எனில் அந்த எண் என்பது?

(1) 619 (2) 609

(3) 591 (4) 509

050. கீழ்க்கண்ட கூற்றுகளைப் படித்து சரியான தெரிவைத் தேர்ந்தெடு.

T wW I ஒரு வட்டத்தின் வெட்டுக் கோடு என்பது வட்டத்தில் முடிவுப் புள்ளிகளைக் கொண்ட கோட்டுத்துண்டு.

கூற்று II ஒரு நாண் என்பது வட்டத்தின் மையம் வழியாகவும் வட்டத்தினை இரு புள்ளிகளிலும் வெட்டும் கோடு ஆகும்.

(1) கூற்று I மட்டும் சரி.

(2) கூற்று II மட்டும் சரி.

(3) இரண்டு கூற்றுகளுமே சரியானவை.

(4) இரண்டு கூற்றுகளுமே தவறானவை.

051. காபித்தூளின் விலை 100 கிராம் ₹ 24 மற்றும் டீ தூளின் விலை 1 கிலோகிராம் ₹ 180 எனவும் உள்ளபோது காபிக்கும் டீக்குமான விலைகளின் விகிதம் என்பது?

(1) 2 : 15 (2) 4 : 5

(3) 4 : 3 (4) 3 : 4

052. அனில் 2/3 மணியும், ராம் 3/4 மணியும், சேட்டன் 1/5 மணியும் மற்றும் தரம் 5/6 மணியும் உடற்பயிற்சியை மேற்கொண்டால், எவர் பெரும் காலம் உடற்பயிற்சியை மேற்கொண்டுள்ளார்?

(1) சேட்டன்

(2) தரம்

(3) அனில்

(4) ராம்

049. The least number which when divided by 25, 40 and 60 leaves 9 as the remainder in each case is :

(1) 619 (2) 609

(3) 591 (4) 509

050. Read the given statements and choose the correct option :

Statement-I : A secant of a circle is a line segment having its end points on the circle.

Statement-II : A chord is a line passing through the centre of a circle and intersecting the circle at two points.

(1) Only statement-I is true

(2) Only statement-II is true

(3) Both the statements are true

(4) Both the statements are false

051. The ratio of price of coffee to that of tea when coffee costs ₹ 24 per 100 gm and tea costs ₹ 180 per kg is :

(1) 2 : 15 (2) 4 : 5

(3) 4 : 3 (4) 3 : 4

052. Anil exercised for 2/3 hour, Ram exercised for 3/4 hour, Chetan exercised for 1/5 hour and Dharm exercised for 5/6 hour. Who exercised for maximum time ?

(1) Chetan

(2) Dharm

(3) Anil

(4) Ram

053. ஒரு சதுரம் மற்றும் செவ்வகத்தின் பரப்பளவுகள் சமம். சதுரத்தின் பக்கம் 30cm மற்றும் செவ்வகத்தின் அகலம் 25 cm எனில் செவ்வகத்தின் நீளம் என்பது?

(1) 38 cm
(2) 40 cm
(3) 36 cm
(4) 42 cm

054. ஒரு கடைக்காரர் இரு அலைப் பேசிகளை முறையே ₹ 15600 மற்றும் ₹ 14400 என்ற விலைக்கு வாங்கி அவைகளை ₹ 31200 என்ற விலைக்கு விற்றால் நஷ்டம் அல்லது லாப சதவீதம் என்பது?

(1) 6% லாபம்
(2) 4% லாபம்
(3) 4% நஷ்டம்
(4) 8% நஷ்டம்

055. ஒரு தொழிற்சாலை மின் விளக்குகளை உற்பத்தி செய்யும் போது ஒவ்வொரு 15 விளக்குகளுக்கும் 2 குறைபாடு உடையதாக உள்ளது. தொழிற்சாலை நாளொன்றிற்கு 630 மின் விளக்குகளை உற்பத்தி செய்யுமானால் நாளொன்றிற்கு உற்பத்தி செய்யும் குறைபாடு உடைய விளக்குகளின் எண்ணிக்கை என்பது?

(1) 90 (2) 42
(3) 84 (4) 45

056. பின்வரும் படத்தில் (x+y) -ன் மதிப்பு என்பது?




(1) 163° (2) 105°
(3) 138° (4) 117°

053. The areas of a square and a rectangle are equal. If the side of the square is 30 cm and the breadth of the rectangle is 25 cm, then the length of the rectangle is :

(1) 38 cm
(2) 40 cm
(3) 36 cm
(4) 42 cm

054. A shopkeeper bought two mobile phones for ₹ 15,600 and ₹ 14,400 respectively and sold them for a total of ₹ 31,200. His loss or gain percentage is :

(1) gain of 6%
(2) gain of 4%
(3) loss of 4%
(4) loss of 8%

055. A factory produces electric bulbs and 2 out of every 15 bulbs are defective. If the factory produces 630 bulbs per day, then the number of defective bulbs produced per day is :

(1) 90 (2) 42
(3) 84 (4) 45

056. The value of (x + y) in the following figure is :




(1) 163° (2) 105°
(3) 138° (4) 117°

057. 1 மற்றும் 60 இடையிலான எல்லா பகா எண்களின் கூட்டுத்தொகை 3 என்ற அலகு இலக்கம் பெற்றுள்ளது என்பது?

(1) 168 (2) 135

(3) 129 (4) 78

058. கூற்றுகளைப் படித்து சரியான தெரிவைத் தேர்ந்தெடு.

கூற்று I ஒரு கோடு இரு முடிவு புள்ளிகளைப் பெற்றுள்ளன.

கூற்று II இரண்டு கோடுகள் வெட்டிக் கொள்ளவோ அல்லது இணையாக அமையும்.

(1) கூற்று I மட்டும் சரி.

(2) கூற்று II மட்டும் சரி.

(3) இரண்டு கூற்றுகளுமே சரியானவை.

(4) இரண்டு கூற்றுகளுமே தவறானவை.

059. சுனிதா $3\frac{3}{4}$ m துணியை வாங்குகிறாள். அவள் $\frac{5}{6}$ m துணியை குர்தாவிற்கும் $\frac{2}{3}$ m துணியை அவளுடைய விளையாட்டு பொம்மைக்கும் பைஜாமாவிற்காகவும் பயன்படுத்துகிறாள். அவளிடம் உள்ள எஞ்சிய துணியின் அளவு?

(1) $2\frac{3}{4}$ m (2) $2\frac{1}{4}$ m

(3) $2\frac{1}{6}$ m (4) $2\frac{2}{3}$ m

060. ஒரு தேர்வில் 5 சிறுவர்கள் மற்றும் 7 சிறுமிகள் கொண்ட ஒரு குழுவினர் உள்ளனர். சிறுவர்களின் சராசரி மதிப்பெண்கள் 12 மற்றும் சிறுமிகளின் சராசரி மதிப்பெண்கள் 18. அக்குழுவின் சராசரி மதிப்பெண்கள் என்பது?

(1) 14.5 (2) 15

(3) 15.5 (4) 10

057. Sum of all the prime numbers between 1 and 60 having 3 as the unit digit is :

(1) 168 (2) 135

(3) 129 (4) 78

058. Read the given statements and choose the correct option :

Statement-I : A line has two end points.

Statement-II : Two lines either intersect or are parallel.

(1) Only statement-I is true

(2) Only statement-II is true

(3) Both the statements are true

(4) Both the statements are false

059. Sunita bought $3\frac{3}{4}$ m of cloth. She used $\frac{5}{6}$ m cloth for Kurta and $\frac{2}{3}$ m cloth for Pyjamas of her doll. The cloth left with her is :

(1) $2\frac{3}{4}$ m (2) $2\frac{1}{4}$ m

(3) $2\frac{1}{6}$ m (4) $2\frac{2}{3}$ m

060. In an examination, in a group of 5 boys and 7 girls, the average marks of the boys is 12 and the average marks of the girls is 18. The average marks of the group is :

(1) 14.5 (2) 15

(3) 15.5 (4) 10

061. A என்பவர் ₹ 3500 மூன்று ஆண்டுகளுக்கு, ஆண்டிற்கு 4% வீதமும், B என்பவர் ₹ 4200 இரண்டு ஆண்டுகளுக்கு, ஆண்டிற்கு 5% வீதமும், C என்பவர் ₹ 2800 மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டிற்கு 5% வீதமும் ஆன எளிய வட்டிக்கு வாங்குகிறார்கள்.
கீழ்க்கண்ட எந்தக் கூற்று சரியானது?

(1) A மற்றும் B மட்டும் ஒவ்வொருவரும் ₹ 420 எளிய வட்டியில் செலுத்த வேண்டும்.

(2) A, B மற்றும் C அனைவரும் ஒவ்வொருவரும் ₹ 420 எளிய வட்டியில் செலுத்த வேண்டும்.

(3) B மற்றும் C மட்டும் ஒவ்வொருவரும் ₹ 840 எளிய வட்டியில் செலுத்த வேண்டும்.

(4) A மற்றும் C மட்டும் ஒவ்வொருவரும் ₹ 420 எளிய வட்டியில் செலுத்த வேண்டும்.

062. ஒரு திட கனச்செவ்வகம், பக்கங்கள் ஒவ்வொன்றும் 4cm உடைய மூன்று திட கனசதுரங்களை இணைத்து உருவாக்கப்படுகிறது. உருவாக்கப்பட்ட கனச்செவ்வகத்தின் கன அளவு?

(1) 192 $cm^3$ (2) 64 $cm^3$

(3) 128 $cm^3$ (4) 256 $cm^3$

063. கொடுக்கப்பட்டுள்ள வினாவில் காரணக்கூற்று (A) மற்றும் உண்மைக் கூற்று (R) எனும் இரு கூற்றுகள் தரப்பட்டுள்ளன. கீழ்க்கண்டவற்றை கவனமாகப் படித்து கொடுக்கப்பட்டுள்ள தெரிவுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு.
காரணக் கூற்று (A): 41 என்பது பகா எண்
காரணக் கூற்று (R) இது எண் 1 மற்றும் அதே எண் என்ற இரு காரணிகளை மட்டும் கொண்டுள்ளது.

(1) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை மற்றும் (R) என்பது (A) யிற்கான சரியான விளக்கமாகும்.

(2) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை மற்றும் (R) என்பது (A) யிற்கான சரியான விளக்கமன்று.

(3) (A) சரி ஆனால் (R) தவறு.

(4) (A) தவறு ஆனால் (R) சரி.

061. A borrowed ₹ 3500 for 3 years at the rate of 4% p.a., B borrowed ₹ 4200 for 2 years at the rate of 5% p.a. and C borrowed ₹ 2800 for 3 years at the rate of 5% p.a. on simple interest. Which of the following statements is true ?

(1) Only A and B have to pay ₹ 420 each as simple interest

(2) A, B and C all have to pay ₹ 420 each as simple interest

(3) Only B and C have to pay ₹ 840 each as simple interest

(4) Only A and C have to pay ₹ 420 each as simple interest

062. A solid cuboid is formed by joining three solid cubes of side 4 cm each. The volume of the cuboid so formed is :

(1) 192 $cm^3$ (2) 64 $cm^3$

(3) 128 $cm^3$ (4) 256 $cm^3$

063. In the given question two statements Assertion (A) and Reason (R) are given. Read them carefully and choose the correct option from the given options.
**Assertion (A) :** 41 is a prime number.
**Reason (R) :** It has only two factors-number 1 and the number itself.

(1) Both (A) and (R) are correct and (R) is the correct explanation of (A)

(2) Both (A) and (R) are correct but (R) is not the correct explanation of (A)

(3) (A) is correct but (R) is not correct

(4) (A) is not correct but (R) is correct

064. ஒரு புகை வண்டி ஒரு குறிப்பிட்ட தொலைவை 40 நிமிடங்களில் 120 km/hr வேகத்தில் கடந்து செல்கிறது. புகைவண்டியின் வேகம் மணிக்கு 150 km என அதிகரிக்கும் போது அதே தொலைவை எவ்வளவு குறைவான நேரத்தில் கடக்கும் ?

(1) 5 நிமிடங்கள்

(2) 10 நிமிடங்கள்

(3) 16 நிமிடங்கள்

(4) 8 நிமிடங்கள்

065. ஒரு திரவம் 50°F (பாரன்ஹிட்) வெப்பப்படுத்தப்படுகிறது. மற்றும் மற்றொரு திரவத்தின் வெப்பநிலை 25°C (செல்ஷியஸ்) உயர்த்தப்படுகிறது. அவ்விரு திரவங்களின் வெப்பநிலை வேறுபாடு (டிகிரி செல்ஷியஸ் அலகில்)

(1) 12°C (2) 15°C

(3) 10°C (4) 8°C

066. மிகை நிரப்பு கோணம் 1/5 மடங்கு செங்கோணத்தின் இரு மடங்கு கொண்ட நிரப்புக் கோணத்தின் மிகை நிரப்பு கோணம் என்பது?

(1) 144° (2) 126°

(3) 124° (4) 132°

067. அனிதா ஒரு குறிப்பிட்ட தொகையை 4 ஆண்டுகளுக்கு ஆண்டிற்கு 5% வீதம் முதலீடு செய்து ₹850 எளிய வட்டியைப் பெறுகிறாள். சுமிதாவும் ஒரு குறிப்பிட்ட தொகையை 6 ஆண்டுகளுக்கு ஆண்டிற்கு 4% வீதம் முதலீடு செய்து ₹840 எளிய வட்டியைப் பெறுகிறாள். அவர்கள் முதலீடு செய்த தொகைகளுக்கு இடையேயான வேறுபாடு என்பது?

(1) ₹ 1690

(2) ₹ 1250

(3) ₹ 750

(4) ₹ 520

064. A train covered a certain distance with a speed of 120 km/hr in 40 minutes. If the speed of the train is increased to 150 km/hr, then how much less time it will take to cover the same distance ?

(1) 5 minutes

(2) 10 minutes

(3) 16 minutes

(4) 8 minutes

065. A liquid is heated to a temperature of 50° F (Fahrenheit) and the temperature of another liquid was raised to 25°C (Celcius). The difference in temperature of the two liquids in degree celcius is :

(1) 12°C (2) 15°C

(3) 10°C (4) 8°C

066. The supplementary angle of the complementary angle of two times of one-fifth of a right angle is :

(1) 144° (2) 126°

(3) 124° (4) 132°

067. Anita invested a certain sum for 4 years at the rate of 5% p.a. and received ₹ 850 as simple interest. Sunita also invested certain sum for 6 years at the rate of 4% p.a. and received ₹ 840 as simple interest. The difference of the sums they invested is :

(1) ₹ 1690

(2) ₹ 1250

(3) ₹ 750

(4) ₹ 520

068. பின்வரும் படத்தின் சுற்றளவு என்பது?




(1) 54 cm
(2) 45 cm
(3) 30 cm
(4) 36 cm

069. பின்வரும் கூற்றுகளில் உண்மையற்றக் கூற்றுகள் யாவை?

(A) இரண்டு குறுங்கோணங்கள் எப்போதும் மிகை நிரப்பு கோணம்
(B) இரண்டு விரிகோணங்கள் எப்போதும் மிகை நிரப்பு கோணம்
(C) செங்கோணத்தின் பாதியளவின் இரு மடங்கு உள்ள இரு சம கோணங்கள் மிகை நிரப்பு கோணம்
(D) ஒரு குறுங்கோணம் மற்றும் ஒரு விரிகோணம் இரண்டும் எப்போதும் நிரப்பு கோணம்

(1) (A) மற்றும் (C) மட்டும்
(2) (B), (C) மற்றும் (D) மட்டும்
(3) (C) மற்றும் (D) மட்டும்
(4) (A), (B) மற்றும் (D) மட்டும்

070. பின்வருவதில் * மதிப்பு என்பது?

3958 – * 7 * = 3 * 8 *

(1) 6
(2) 5
(3) 4
(4) 3

068. The perimeter of the following figure is :




(1) 54 cm
(2) 45 cm
(3) 30 cm
(4) 36 cm

069. Which of the following statements are not true ?

(A) Two acute angles are always supplementary.
(B) Two obtuse angles are always supplementary.
(C) Two equal angles which are twice of the half of a right angle are supplementary.
(D) An acute and an obtuse angles are always complementary.

Choose the correct answer from the options given below :

(1) (A) and (C) only
(2) (B), (C) and (D) only
(3) (C) and (D) only
(4) (A), (B) and (D) only

070. The value of * in the following is :

3958 – * 7 * = 3 * 8 *

(1) 6
(2) 5
(3) 4
(4) 3

